**தலைப்பு 211 – அரசாங்க அச்சக திணைக்களம்**

----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சக திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க அச்சக திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க அச்சக திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| சீஏஎம்/டீ/ஜீபீ/எம்எல்/2021 இன் 1.2.1(இ)(i) | 2015 ஆம் ஆண்டின் போது விலை மதிப்பீட்டு திணைக்களத்தால் ரூபா 2200 மில்லியன் தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட கொழும்பு 08 இல் அமைந்துள்ள திணைக்களத்திற்கு சொந்தமான காணியின் உரித்து 2021 ஆம் ஆண்டின் நவம்பர் 22 ஆம் திகதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் திணைக்களத்திற்கு கைளிக்கப்பட்ட போதும் அந்த காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காணி சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| சீஏஎம்/டீ/ஜீபீ/எம்எல்/2021 இன் 1.2.1(இ)(ii) | 2003 ஆம் ஆண்டின் சனவரி 31 ஆம் திகதி கதிர்காமம் பிரதேச செயலாளரால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட பரப்பளவு 0.105 ஹெக்டேயர் அளவான கதிர்காமத்தில் அமைந்துள்ள காணி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த காணி சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | விலை மதிப்பீட்டு திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,200 மில்லியனில் மதிப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரால் திணைக்களத்திற்கு உரித்து கையளிக்கப்பட்ட கொழும்பு 08 இல் அமைந்துள்ள காணியின் பெறுமதி மற்றும் 2003 ஆம் ஆண்டின் சனவரி 31 ஆம் திகதி கதிர்காமம் பிரதேச செயலாளரால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட பரப்பளவு 0.105 ஹெக்டேயர் அளவாக கதிர்காமத்தில் அமைந்துள்ள காணி என்பன மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கொழும்பு 08 இல் அமைந்துள்ள திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற காணி மற்றும் கதிர்காமத்தில் அமைந்துள்ள காணி என்பன 2022 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்ட உடன் மிகுதி நடவடிக்கைகளை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இந்த காணி சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 41,997,251 ஆக இருந்த போதிலும், திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் அது ரூபா 41,306,373 ஆனமையால் நிதி நிலைமைக்கூற்றில் | அரச கணக்குகள் திணைக்களத்திற்கு மாற்றல் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட போதும், அது திறைசேரியால் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணத்தினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். |

பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 690,878 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2021 செப்டம்பர் 21 ஆம் திகதிய PFD/RED/WO/2021/30 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்யை ஆண்டுகளிலும் ரூபா 81,019,843 ஆன நிலுவை வருமான மீதி பின்தொடர் நடவடிக்கைகளை செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்ட போதும் அதில் எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை பணத்தை செலுத்துமாறு அனுப்பப்பட்டுள்ள கடிதம் மாத்திரம் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த நிலுவை பணத்தை விரைவாக அறவிடுவதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 185,579,595 ஆன நிலுவை வருமானத்தில் 2.3 சதவீதம் அதாவது ரூபா 4,296,250 அளவில் மீளாய்வாண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. நிலுவை பணத்தை செலுத்துமாறு அனுப்பப்பட்டுள்ள கடிதம் மாத்திரம் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த நிலுவை பணத்தை விரைவாக அறவிடுவதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) திணைக்களத்தின் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்க நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 20,840,046 இல் பத்து நிறுவனங்களின் மீதி உறுதிப்படுத்தல் கிடைத்திருந்ததுடன், எட்டு நிறுவனங்களின் மீதி காணப்படவில்லை அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 16,585,005 மீதி தொடர்பாக திணைக்களத்தால் உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. நிலுவை பணத்தை செலுத்துமாறு அனுப்பப்பட்டுள்ள கடிதம் மாத்திரம் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த மீதியில் வேறுபடுவதற்கான காரணங்களை கண்டறிந்து விரைவாக மீதி சரிசெய்யப்படல் வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை மாற்றும் போது உரிய அதிகார தரப்பினரால் அந்த மாற்றல்களுக்காக அதிகார பலம் வழங்கப்படும் வரை அவ்வாறான மிகை செலவினம் செய்ய முடியாதிருத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் முறையே ரூபா 11,500,000 மற்றும் ரூபா 20,000,000 பெறுமதியான இரண்டு மாற்றல் பத்திரங்களுக்காக உரிய அதிகார பலம் (அமைச்சின் செயலாளரின்) பெறப்பட்டிருக்கவில்லை. | தவறினால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மூலம் இந்த நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை மாற்றுவதற்காக உரிய அதிகார பலத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்த போதும் தற்போது அதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இந்த பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவின கூற்றில் 211-1-2-0-1205 ஏனைய செலவின விடயத்தின் பிரகாரம் ரூபா 141,742,549 நிதி ஏற்பாட்டில் 10 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள இந்த சேமிப்பு ஆண்டின் செலவின கட்டுப்பாட்டினால் மேற்கொள்ளப்பட்ட சேமிப்பாகும். அவ்வாறே எனினும், ஆண்டின் இறுதியில் அந்த செலவினமாக 211-1-2-0-1205 ஆண்டிற்குரிய பொறுப்பாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாரு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 586,014,129 தொகை திணைக்களத்தின் பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. | 211-1-2-0-1205 ஏனைய செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு சேமிக்கப்படுவதற்கு காரணமாக திறைசேரியின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு போதியளவான அளவு கட்டுநிதி கிடைக்கப்பெறாமை ஆகும். திணைக்களத்தின் அச்சிடல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு அத்தியாவசியமான மூலப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டமையினால் 211-1-2-0-1205 ஏனைய செலவின விடயங்களில் கடப்பாடு ஏற்படுத்த வேண்டி ஏற்பட்டது. | தமது செலவின தன்மையின் பிரகாரம் முகாமைத்துவம் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் | | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | | |
| (i) | 1989 இன் மார்ச் 23 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 19/89 இன் 06 ஆம் பந்தி | 159,753,434 | மேலதிகநேர படி வழங்கும் போது உறுதிச்சீட்டு தயாரித்து உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அந்தந்த பதவியணியின் அங்கத்தவர்கள் மேலதிகநேர உறுதிச்சீட்டு தயாரிக்காதிருந்ததுடன், காலக் கணிப்பீட்டு பிரிவினால் வழங்கப்படுகின்ற மணித்தியால எண்ணிக்கையின் பிரகாரம் மேலதிக நேரம் செலுத்தப்படுகின்றது. | திணைக்களத்தின் பதவியணியினர் 1264 ஆகும். அவர்களின் பல்வேறு பிரிவுகளில் கடமைகளை நிறைவேற்றுவதுடன். அந்தந்த பிரிவிற்காக தனித்தனியாக செலவினங்கள் தயாரிக்கப்படுகின்றது. திணைக்களத்தின் 1264 பதவியணியினருக்காக அவ்வாறு வேலைப் பத்திரங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் கணிசமான காலம் மற்றும் மேலதிக பதவியணியினரும் தேவையாகும். அதனால் ஒவ்வொரு உத்தியோகத்தாரினாலும் சேவையாற்றப்படுகின்ற மேலதிகநேர எண்ணிக்கை நேரம் தொடர்பான தகவல்கள் சரியாகவும் சுயமாகவும் திணைக்களத்தின் கணனி முறைமை ஊடாக பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கணனி முறைமை தயாரித்து அந்த | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு திட்டமொன்றை ஸ்தாபித்து விரைவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் பதவியணியினருக்காக மேலதிகநேரம் கணிப்பீடு மேற்கொள்ளப்படும் என் தயவுடன் அறியத்தருகின்றோம். |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் வைப்புக் கணக்கின் வணிக அச்சிடல் வைப்பு பேரேட்டில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 96,271,633 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 53,362,373 தொகை 2021 ஆம் ஆண்டின் வணிக அச்சிடலுக்காக கிடைத்த முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும், அதில் ரூபா 15,011,695 தொகையான கட்டளை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், இந்த பெறுமதி 2021 இல் கிடைத்த மொத்த கட்டளைகளின் பெறுமதியில் 28 சதவீதம் ஆகும். | 2021 ஆம் ஆண்டிற்குரிய நிதியில் இதுவரையில் ரூபா 38,350,678 சேமிப்பாக இருந்ததுடன், ரூபா 15,011,695 தொகைக்கு உரிய வணிக அச்சிடல் கட்டளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை தயவுடன் அறியத்தருகின்றோம். | திணைக்களத்திற்கு கிடைக்கின்ற கட்டளைகளை தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு முடியுமான வகையில் உள்ளக கட்டுப்பாட்டு திட்டத்தை விரைவாக திட்டமிட்டு அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிய நேரத்தில் கேள்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையினால் தீர்மானம் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் உற்பத்தி செயற்பாடுகளில் இருந்து அகற்றப்பட்ட அஸ்கோன் கடதாசி கிலோ கிராம் 50,920 அளவில் கிலோ கிராம் ஒன்று ரூபா 65 விலையில் கொள்வனவு செய்வதற்கு புதிய வழங்குனர் இணங்கிருக்கும் போது முன்னைய வாடிக்கையாளருக்கும் கொள்வனவாளருக்கும் ஒரு கிலோ கிராம் ரூபா 26.50 வீதம் விற்பனை செய்தமையினால் திணைக்களத்திற்கு ரூபா 1,960,420 நட்டம் ஏற்பட்டிருந்தது. | திணைக்களத்தின் காலரீதியில் ஒவ்வொரு சேகரிக்கப்பட்ட இந்த அகற்றப்பட்ட அஸ்கோன் கடதாசி பல்வேறு தாக்கங்களுக்கு உற்பட்டு இருந்த கடதாசியாகும். இதனுள் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீயினால் இழக்கப்பட்ட இருப்பும் உள்ளடங்கி உள்ளது. இந்த களஞ்சியத்தை சுத்தப்படுத்துவதற்காக இந்த அஸ்கோன் இருப்பு முன்னைய ஒப்பந்தகாரருக்கே வழங்கப்பட்டது. | கேள்வி நடவடிக்கைகளை சரியாக திட்டமிட்டு காலரீதியில் மேற்கொள்ளக் கூடிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டு திட்டத்தை விரைவாக முறைமைப்படுத்துதல் வேண்டும். மேலும் திணைக்களத்தின் வளவில் அகற்றப்படும் வரை இந்த உடைந்த பொருட்களுக்காக முறையான பாதுகாப்பு ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உரிய நேரத்தில் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் 2021 ஆம் ஆண்டில் மூன்று மாதங்களின் போது அஸ்கோன் கடதாசி கிலோ கிராம் ஒன்று புதிய கொள்வனவாளருக்கு ரூபா 65 இற்கு விற்பனை செய்ய முடியுமாக காணப்படும் போது முன்னைய விற்பனையாளருக்கு கிலோ கிராம் ரூபா 26.50 இற்கு விற்றமையினால் திணைக்களத்திற்கு ரூபா | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோயின் காரணமாக பெறுகை நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற இந்த அஸ்கோன் கடதாசியின் காரணமாக திணைக்கள சூழலில் இட வசதியினை முகாமைத்துவம் செய்தல் வசதியீனமாக இருந்தது. அதனால் இந்த இருப்பை தொழில்நுட்ப மதிப்பீட்டு | கேள்வி நடவடிக்கைகளை சரியாக திட்டமிட்டு காலரீதியில் மேற்கொள்வதற்கு உரிய பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை விரைவாக முறைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 10,234,455 நட்டம் ஏற்பட்டிருந்தது. | குழுவின் அடிப்படையில் பெறுகைக் குழு முன்னைய கொள்வனவாளருக்கு 2021 ஆம் ஆண்டின் இறுதி 03 மாதங்களில் அஸ்கோன் கடதாசி அகற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | விற்பனை செய்யப்படும் வரை திணைக்களத்தின் உற்பத்தி செயற்பாடுகளில் இருந்து அகற்றப்படுகின்ற அஸ்கோன் கடதாசிக்காக முறையான பாதுகாப்பொன்றை வழங்குவதற்கு முடியாமையினால் 2021 ஆம் ஆண்டில் அஸ்கோன் கடதாசி விற்பனையின் போது 90 சந்தர்ப்பங்களின் போது 30 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான நிறை குறைவு ஏற்பட்டமையினால் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 4,917,817 தொகை இழக்கப்பட்டிருந்தது. | அதற்குரிய கால எல்லையில் அஸ்கோன் கடதாசி களஞ்சியத்தில் உரிய நியமத்தில் தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதன் கூரை மற்றும் வடிகாண் முறைமை முறையற்றதாக தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. அதனால் இந்த இருப்பை குறித்துரைத்த நியமத்தில் காணப்படாதிருந்ததுடன், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப முறையான நிறையில் 30 சதவீதம், 50 சதவீதம் ஆக குறைத்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தில் இருந்து அகற்றப்படும் வரை உரிய பொருட்களுக்காக சரியான பாதுகாப்பு ஒன்று வழங்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது ரூபா 133,900 பெறுமதியான தராசை கொள்வனவு செய்யும் பெறுகையின் போது குறித்துரைத்த மாதிரி மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளாமையினால் ரூபா 280,000 மேலும் தராசொன்றை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 133,900.00 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட தராசு அதன் சரியான தன்மையை பரீட்சிப்பதற்காக அளவை, அலகு நியமம் மற்றும் சேவை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் போது இவ்வாறான விற்பனை கூடத்திற்காக பயன்படுத்துகின்ற தராசு விற்பனை செய்யப்படுகின்ற நிறுவனம் அந்த நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்தமை எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | திட்டங்களுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதனால் தராசை கொள்வனவு செய்திருந்த நிறுவனம் அவ்வாறு அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனம் அல்லாதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் ரூபா 280,000.00 தொகையில் இன்னுமொரு தராசினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட தராசு திணைக்களத்தின் உற்பத்தி பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (உ) | பாவனையில் இருந்து அகற்றப்பட்ட அச்சிடல் தகரம் விற்பனையை கைவிடுமாறு அமைச்சின் செயலாளர் கட்டளையிட்டு இருக்கும் போது அதனை கவனத்தில் கொள்ளாமல் அமைச்சின் பிரதான கணக்காளரால் பெறுகைகள் சரியான இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கட்டளையை கவனத்தில் கொள்ளாமல் மீளாய்வாண்டில் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட அச்சிடல் தகரம் சந்தை விலையான ரூபா 761 இற்கு விற்பனை செய்வதற்கு முடியுமாக காணப்படும் போது, ரூபா 286.88 தொகையில் விற்பனை செய்ததன் காரணமாக உழைக்கக் கூடியதாக இருந்த ரூபா 1,051,361 தொகை இழக்கப்பட்டிருந்தது. | 2022.10.13 ஆம் திகதி வெகுசன ஊடகத் துறை அமைச்சின் செயலாளருக்கு பதிலாக பிரதான கணக்காளரால் கையொப்பமிடப்பட்ட கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் முன்னால் அச்சக தகர விற்பனைக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தகாரருக்கு அகற்றப்படுகின்ற அச்சக தகடுகள் கேள்வி நிபந்தனைகள் பிரகாரம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த பெறுகைகளை அமுல்படுத்தும் போது தற்போதைய சந்தை விலை தளம்பல்களை கவனத்தில் கொண்டு எங்களால் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இருந்து அவர்களினால் அகற்றப்படுகின்ற அச்சிடல் தகரங்களை கொள்வனவு செய்கின்ற நிறுவனம் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டிருந்துதடன், அதன் பிரகாரம் அந்த நிறுவனத்தின் தகர இருப்பு 1kg ரூபா 761.00 தொகையில் விற்பனை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் முதலாவது கட்டளையை அமுல்படுத்தாமையின் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைத்த கூடியதாக இருந்த பொருளாதார நலன் இழக்கப்பட்டதா என பரீட்சித்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்யப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எங்களாலும் அந்த நிறுவனத்தில் இது தொடர்பாக விசாரணை செய்யப்பட்ட போதும் அந்த விலையில் இந்த திணைக்களத்தின் தகரங்களை கொள்வனவு செய்தல் நிராகரிக்கப்பட்ருந்தது. அவ்வாறே அந்த விலையில் இந்த திணைக்களத்தில் இருந்து அகற்றப்படுகின்ற தகரங்களை கொள்வனவு செய்வதற்கு வேறு எந்தவொரு நிறுவனமும் முன்வராமையினால் பெறுகைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளருக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் விலைக் குழுவில் அபிவிருத்தி செய்யப்பட்ட ரூபா 286.88 தொகையில் பெறுகைகள் கையளிக்கப்பட்ட நிறுவனத்திற்கு தகரம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பாவனையில் அகற்றப்படுகின்ற தகரத்தை விற்பனை செய்வதற்குரிய பத்திரிகை அறிவித்தல், கேள்வி நிபந்தனைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை, கேள்வி அறிவித்தலை பிரசுரித்தல், கேள்வி கோருதல், கேள்வி திறத்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையை மேற்கொள்வதற்கு திணைக்கள தலைவரின் விருப்பத்தின் பிரகாரம் | 2021 ஆம் ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் பரவலுடன் அலுவலக நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமை, தனிமைப்படுத்தல் சட்டம் விதிக்கப்பட்டமை, நடமாடும் வரையரை விதித்தமை போன்ற நிலைமையின் அடிப்படையில் இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நோய் பரவிச் சென்ற கால பகுதியில் அரசாங்க சேவையை இடையூறு இன்றி நடாத்திச் செல்ல வேண்டியிருந்தமை 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி இலக்கம் 02/2021(1) என்ற அரச சுற்றறிக்கையின் மூலம் திணைக்களத்தின் |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதாவது பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட திணைக்கள தலைவரின் தீர்மானத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்), அச்சக திணைக்களத்தின் தலைவர் மற்றும் அச்சக திணைக்களத்தின் பிரதான கணக்காளர் இந்த பெறுகைக் குழுவின் உறுப்பினராக இருந்ததுடன், குழுவில் பங்குபற்றியதன் அடிப்படையில் படியும் வழங்கப்பட்டிருந்தது. | | தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதனால் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களை குறைக்கும் வகையில் பெறுகைகள் திட்டமிடப்படல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1964 இன் 28 ஆம் இலக்க காணி கைப்பற்றல் சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 2003 சனவரி 31 ஆம் திகதி கதிர்காமம் பிரதேச செயலாளர் மூலம் அச்சக திணைக்களத்திற்கு 2003 சனவரி 31 ஆம் திகதி கையளிக்கப்பட்ட பரப்பளவு 0.105 ஹெக்டேயர் அளவாக காணி அரசாங்கத்தின் நிறுவனம் ஒன்றாக இல்லாத அரசாங்கத்தின் அச்சக கூட்டுறவு தயாரிப்பாளர் மற்றும் கடன் வழங்குகின்ற சங்கங்கள் போன்ற நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் அச்சக கூட்டுத்தாபன உரிமையாளர் மற்றும் கடன் வழங்குகின்ற சங்கங்கள் வெளிவாரி நிறுவனங்கள் அல்லாதிருந்ததுடன், திணைக்கள அங்கத்தவர்களினால் பேணிச் செல்லப்படுகின்ற கூட்டுறவு நலன்புரி சங்கங்களாகும். அந்த சங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் அரசாங்க அச்சக அதிபதியினால் முழுமையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், உரிய காணி அந்த | இந்த காணி அரசாங்கத்திற்கு சொந்தமான காணியாகும். திணைக்கள ஊழியர்களை உள்ளடக்கிய அரசாங்கத்தின் அச்சக கூட்டுறவு சங்கம் கடன் வழங்குகின்ற சங்கங்கள் அரசாங்க நிறுவனங்கள் அல்லாதவையாகும். அதனால் அந்த சங்கங்கள் தனியார் நிறுவனமாகும். |

| | | |
|---|---|---|
| | சங்கத்தின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கோ அல்லது ஏனைய நலன்களை பெற்றுக்கொள்வதற்காக சந்தாப்பங்கள் வழங்கப்படாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். மேலும் இந்த காணி மதிப்பீடு செய்யும் போது எதிர்காலத்தில் அரசாங்கத்தின் அச்சக திணைக்களத்தின் சொத்தொன்றாக ஆவணப்படுத்தவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | அதனால் அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்துக்கள் தனியார் தரப்பினருக்கு கையளிக்க முடியாது. |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் பாட புத்தகங்களில் 06 வகைகளில் 1,028,000 பிரதிகளை அச்சிடுவதற்காக வழங்கப்பட்ட போதிலும், அந்த கட்டளை 27 நாட்கள் 156 நாட்கள் வரை தாமதமடைந்தமையால் ரூபா 4,832,545 மீள வழங்கப்பட்டு தாமதக் கட்டணங்களுக்கு மேலதிகமாக கட்டணம் அறவிட்டதன் காரணமாக நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | எமது திணைக்களத்திற்கு தடுக்க முடியாத காரணத்தினால் உரிய தாமதம் ஏற்பட்டமையினால் அவ்வாறு அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் கல்வி வெளியீட்டு திணைக்களத்தால் மீண்டும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். | தாமதம் ஏற்படுகின்ற பிரிவுகளை விரைவாக இனங்கண்டு மீண்டும் தாமதங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1997 திசெம்பர் 16 ஆம் திகதிய அமைச்சரவை குறிப்பு இலக்கம் 97/5232/17/035 இன் பிரகாரம் 1998 சனவரி மாதம் முதல் வணிச அச்சிடல் படி திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுவதுடன், அதன் போது ஒரு மாதமொன்றின் வணிக அச்சிடல் கட்டளையில் (பட்டியல் பெறுமதி) பெறுமதி நிலையாக காணப்படுகின்ற அடிப்படையிலான தொகையில் ரூபா 40 மில்லியன் விகிதாசாரத்தில் அதில் 65 சதவீத பெறுமதி உத்தியோகத்தரின் அடிப்படை சம்பளத்தின் சரி செய்து வணிக அச்சிடல் படி செலுத்தப்படுகின்றது. 23 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய அடிப்படையிலான பெறுமதி அடிப்படையாகக் கொண்டு வணிக அச்சிடல் படி செலுத்தப்படுவதுடன், அந்த பெறுமதி அதிகரித்து கணிப்பிடுவதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை. | அரசாங்க அச்சக திணைக்களத்தின் செலுத்தப்படுகின்ற ஊக்குவிப்பு படி மிகவும் சிறந்த முறைமையொன்றை தயாரித்து சமர்ப்பிப்பதற்கான வரிசை அமைச்சான வெகுசக ஊடக அமைச்சின் தலைவரின் மற்றும் அங்கத்தவர்களினதும் தாபன பணிப்பாளர் நாயகம் பிரதிநிதிப்படுத்தும் வகையில் குழு அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலகதிகமாக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு பரிந்துரை வழங்கப்பட்டது. அதற்கு பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காகவும் ஊக்குவிப்பு படி திட்டமொன்று முன்மொழியப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு அனுப்பி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும், அமைச்சரவை குறிப்பினை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகள் வரிசை அமைச்சில் பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளது. | வணிக அச்சிடல் படிகளை செலுத்தும் போது பயன்படுத்தப்படுகின்ற இந்த 22 வருடங்கள் அளவிலான பழைய பெறுமதி (ரூபா 40 மில்லியன்) விரைவாக திருத்தம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | வணிக அச்சிடல் படிகளை செலுத்தும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக அமைச்சரவை தீர்மானத்தில் காண்பிக்கப்பட்ட | உற்பத்தி நிறுவனம் ஆன இதில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமையின் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது உற்பத்தி கணக்குகளை | விரைவாக அமைச்சரவை தீர்மானத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிபந்தனையான கிரயங்களை கணக்கீடு செய்யும் முறைமையை அறிமுகப்படுத்துதல், அச்சிடல் நடவடிக்கைளில் பிரதான உற்பத்தியை ஆக்கபூர்வமானதாக அதிகரித்துக் கொள்வதற்கும் மற்றும் இனங்காணப்பட்ட நிதி ஏற்பாட்டுடன் செயற்திட்டத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது மாற்று வழியொன்றாக முற்பண கணக்கை ஏற்படுத்துவது என்ற மூன்று நிபந்தனைகள் 1998 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்காக தேவையான அடிப்படை நடவடிக்கைள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2024.01.01 ஆம் திகதி முதல் வணிக முற்பண கணக்கை தயாரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் ஆ8/3/706/969/21 ஆம் இலக்க 2008 திசெம்பர் 02 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் உற்பத்தி தரத்தை கட்டியெழுப்புவதற்காக செலுத்தப்படுகின்ற படிகள் தற்போது ஊழியர்களுக்கு கிடைக்கின்ற சம்பளத்தில் 65 சதவீதம் ஆக 2018 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், திணைக்களத்தின் ஊழியர்களுக்காக அவர்களின் மாதாந்த சம்பளத்தில் 65 சதவீதத்தை விஞ்சி 85 சதவீதம் முதல் 366 சதவீதம் வரை பல்வேறு வகையில் படிகள் 07 வகைகளில் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தமை திணைக்களத்தின் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது | இந்த திணைக்களத்தின் படிகளை செலுத்துவதற்காக அவ்வப்போது தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு வரை அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கு உரிய படிகளை செலுத்துவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டு முதல் தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி படிகள் செலுத்தப்பட்டுள்ளது. உரிய படிகளுக்காக தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டது. ரூபா 12,437,912 கூட்டுத்தொகை அந்த பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது 08 மாதங்களில் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | 1981 திசெம்பர் 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி திணைக்களத்தில் அவசர அச்சிடல் பணிகளை விரைவுபடுத்துவதற்கு சில வேலைப்பகுதிகளுக்காக மேலதிக நேரத்திற்கு பதிலாக வேலைப் பகுதியின் பிரகாரம் கொடுப்பனவு முறைமைக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை தீர்மானம் மேற்கொண்டு 40 வருடங்கள் கடந்திருந்த போதிலும், துண்டுக் கூலி அடிப்படையில் படிகள் செலுத்த வேண்டிய வேலை பகுதி எது எனவும், அந்த படிகளுக்காக செலுத்த வேண்டிய வீதம் எது எனவும் சரியாக இனங்காணாமல் ஒரே பணிகளுக்காக மேலதிக நேரம் மற்றும் துண்டுக் கூலி அடிப்படையில் படிகள் இரு வகையிலும் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் ஒரு பிரிவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது முதலாவது 08 மாத காலத்தில் பதவியணியின் 21 அங்கத்தர்களுக்கு மேலதிகநேர படியாக ரூபா 1,301,008 தொகை துண்டுக் | தற்போது அரசாங்க அச்சக திணைக்களத்தின் ஊக்குவிப்பு படி தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொண்டு உத்தேசிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி அங்கீகரித்துக் கொள்ளும் இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. அதன் போது ஒரே கடமையில் ஒரே நேரத்தில் ஒரு படி மாத்திரம் பெறக்கூடிய வகையில் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் வரிசை அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அல்லது நாளது வரையாக்கப்பட்ட நியாயமான அடிப்டையில் கொடுப்பனவு திட்டமொன்றை ஸ்தாபித்து விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூலி எண்ணிக்கையின் படியாக ரூபா 8,266,277 மற்றும் கனிஷ்ட பதவியணியின் 05 அங்கத்தவர்களுக்கு மேலதிக நேர படியாக ரூபா 266,457 தொகை, துண்டிக் கூலி அடிப்படையில் படியாக ரூபா 813,707 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்களத்தில் சேவையாற்றாத 24 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 3,072,375 கடன் மீதி 05 இற்கும் 25 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிறைவேற்று தரத்தில் 08 உத்தியோகத்தர்கள் தமது உள்ளபடியான பதவியின் கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய பதவிகளில் நீண்ட காலம் பதிற்கடமை ஆற்றியதுடன் அந்த பதிற்கடமைக் காலம் 06 மாதம் முதல் 29 மாத காலம் வரை காணப்பட்டமையும் இதற்காக பதிற்கடமை படியாக ரூபா 2,309,329 தொகை செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு சேர்த்தல் குழுவின் அங்கீகாரம் கிடைத்தவுடன் உடனடியாக பரீட்சை அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்து ஆட்சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |